“சிலருடைய பாவங்கள்
வெளியரங்கமாயிருந்து, நியாயத்
தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும்;
சிலருடைய பாவங்கள்
அவர்களைப் பின்தொடரும்.”

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

செய்தி: 62-01-21E

# ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்

---

**235.** நாம் ஜெபிப்பதற்கு முன்னர் வேறு யாராகிலும் இருந்தாலும், உங்களுடையக் கரங்களை உயர்த்துவீர்களா? அங்கே பின்னாக உள்ள உங்களை நான் காண்கிறேன். தேவன் உங்களை, உங்களை, உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் தவறாயிருக்கிறீர்கள் என்பதை உங்களுடைய ஜீவியமே

காண்பிக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் இன்னமும் தேவனைக் காட்டிலும் உலகத்தை அதிகமாக நேசிப்பீர்களேயானால், அப்பொழுது ஏதோக் காரியம் எங்கோ தவறாய் உள்ளது. உங்களையே உற்றுநோக்குங்கள். அங்கே அறைகளில் உள்ளவர்களே உங்களுடையக் கரத்தை உயர்த்தி, "சகோதரன் பிரான்ஹாம், எனக்காக ஜெபியுங்கள்" என்று கூறுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன்...... அது உண்மை. நற்குணத்திற்கான நேர்மையை, உத்தமத்தை நான் – நான் வியந்து பாராட்டுகிறேன்.

236. இன்றைக்கு பெந்தேகோஸ்தே சபையோடு உள்ள தொல்லை அதுவேயாகும். நாம் இதற்கு முன்பு வழக்கமாக கொண்டிருந்த உண்மையான உத்தமத்தை இப்பொழுது உடையவர்களாயிருக்கவில்லை. நாம் தவறாயிருக்கிறோம் என்று கூறி, அதை வந்து ஒப்புக்கொள்ளும் துணிவை நாம் பெற்றிருக்கவில்லை. சபையானது உலகத்தின் அழுக்கில் புரண்டு உருண்டு கொண்டிருக்கும் வரைக்கும் பிசாசுதான் அதனை பிடித்து வைத்திருக்கிறான். எனவே அதனைச் செய்யாதீர்கள்.

237. நீங்கள் எதைப் பெற்றுள்ளதாகக் கூறிக் கொண்டிருக்கிறீர்களோ, அதை நீங்கள் பெற்றிருக்கவில்லையென்று உங்களுடைய சொந்த ஜீவியமே நிரூபிக்கிறது. அப்படியானால் நாம் ஏன் அதை அறிக்கை செய்யக் கூடாது? “தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.” உங்களால் அதை மறைக்க முடியாது. தேவன் அதைக் குறித்த எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். நீங்கள் சரியாக

ஜீவித்துக் கொண்டிருக்கவில்லை என்பதை நீங்கள் கண்டும், அறிந்துமிருந்தால், அப்பொழுது நீங்கள் ஏன் வந்து அதை அறிக்கையிட்டு, கறையற்றதாக்கிக் கொள்ளக் கூடாது?

238. “சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து, நியாயத் தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும்; சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின்தொடரும்.” என்னுடையதோ முன்பாக போய் விடட்டும். நான் இப்பொழுதே என்னுடைய எல்லாவற்றையும் கூறட்டும். தேவன் அதைச் சரிப்படுத்துவாராக.

அதைத்தான் நாம் செய்ய வேண்டும்.

239. ஏறக்குறைய ஆறு அல்லது எட்டு கரங்கள் மேலே உயர்த்தப்பட்டுள்ளன. ஆனால் இந்தச் சிறு சபையிலோ இன்றிரவு அதைப் பார்க்கிலும் அதிகம் நிச்சயம் இருக்க வேண்டும், ஏனென்றால் இங்கே நூறு அல்லது இருநூறு அல்லது ஒருகால் நூற்றைம்பதுபேர் இருக்கலாம். தேவன் வாலிபனே உன்னை ஆசீர்வதிப்பாராக. இபொழுது பெண்மணியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சகோதரியே,

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அது உண்மை. மகனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. அது நல்லது.

240. ஊஒலிநாடாவில் காலி இடம் – ஆசி............ பெந்தேகோஸ்தே ஸ்திரீகள் முன்பெல்லாம் தங்களுடையத் தலை முடியை வெட்டமாட்டார்கள், ஆனால் இன்றைக்கோ அவர்கள் அதைக் கத்தரிக்கிறார்கள். என்ன சம்பவித்தது? அவர்கள் இதற்கு முன்னர் வழக்கமாகவே முக ஒப்பனை அலங்காரம் செய்து.... கொள்ளமாட்டார்கள்.

உங்களுடையத் தாயார் பெந்தேகோஸ்தே ஸ்திரீயாக இருந்திருந்தால், அவள் அதைச் செய்திருக்கமாட்டாள். ஆனால் இன்றைக்கு என்ன சம்பவித்தது? காரணம் அவர்கள் உலகத்தின் காரியங்களில் உழன்றுகொண்டிருக்கிறார்கள். உலகமோ நம்மை நோக்கிப் பார்க்கிறது. நாம் ஒரு பரிசுத்தமான சபையாய் இருப்பதாக உரிமை கோருகிறோம். காரியம் என்ன? நாம் கிறிஸ்துவின் மணவாட்டியைப் போன்று காணப்படுகிறதில்லை. அங்குள்ள புருஷர்களே, உங்களைக் குறித்ததும் அதேக்

காரியமாகத்தான் உள்ளது. சகோதரனே, உங்களுக்கு அவமானம்.

**241.** பரலோகப் பிதாவே, நான் நோக்கிப் பார்த்து, அதைப் போன்று கடிந்துகொண்டு, இடித்துரைத்து அப்படிப்பட்ட ஒரு முறையில் பீட அழைப்பை விடும்போது, அது மட்டுமீறிய கண்டிப்பு வாய்ந்தது போன்றே தென்படுகிறது. ஆனால் நாம் முடிவை நெருங்கிகொண்டிருக்கிறோம் என்பதை நான் அறியும்போது, என்னுடைய உட்புறத்திலோ இரத்தம் கசிந்துகொண்டிருக்கிறது.

இந்த நாட்களில் ஒன்றில் இந்த சிறு படகுகள் கீறலிட்டு உடையப் போகின்றன. மரணமும், போராட்டங்களும் தாக்கப் போகின்றன. எத்தனையோ முறை நான் அவர்களுக்கு அருகில் அழைக்கப்பட்டு, அவர்களோ, “ஓ, சகோதரன் பிரான்ஹாமே, என்னால் மட்டும் மறுபடியும் உயிரோடு வாழ முடிந்தால் நலமாயிருக்குமே” என்று கூறக் கேட்டிருக்கிறேன். அப்படியானால், கர்த்தாவே இந்தக் காரியங்கள் இப்பொழுதே சரிபடுத்திக் கொள்ளக் கூடியவைகளாயுள்ளனவே!

242. நானோ என்னால் முடிந்தளவு மிகச் சிறந்த முறையில் முயற்சித்துக்கொண்டிருக்கிறேன். தேவனே, நான் ஜனங்களை திட்டாமல், அவர்களுக்கு உதவி செய்ய மாத்திரமே முயற்சித்துக் கொண்டிருக்கிறேன் என்பதைப் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு வெளிப்படுத்தித்தருவாராக. ஆனால் பண்டையப் பவுல் கூறினது போன்று உள்ளதே!. தேவனே, நான் அவர்களைப் புண்படுத்த வேண்டுமென்று விரும்புகிறதில்லை, ஆனால் அவர்கள் எங்கேத் தவறாயிருக்கிறார்கள் என்பதை

காணும்படிக்கு போதியளவுக்கு அவர்களைப் புண்படுத்த விரும்புகிறேன்.

243. இந்த ஜனங்கள் தவறாயிருக்கிறார்கள் என்றும், அவர்கள் சரிசெய்துகொள்ள விரும்புகிறார்கள் என்றும் தேவனுக்கு முன்பாக தங்களுடையக் கரங்களை உயர்த்தி அதை அடையாளங்காட்டப் போதிய மரியாதையோடிருக்கிறபடியால், நீர் இன்றிரவே இவர்களுக்கு அதைச் சரிபடுத்தியருள வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். “தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்;

தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்." ஆனால் நீங்களோ ஒருபோதும் தட்டாமலேயிருந்தால், அப்பொழுது அவர் எப்படித் திறக்கப் போகிறார்? நீங்கள் ஒருபோதும் தேடாமலேயேயிருந்தால், அப்பொழுது நீங்கள் எப்படி கண்டடையப் போகிறீர்கள்?

244. கர்த்தாவே, பரிசுத்த ஆவியானவர்தாமே இன்றிரவே இந்த ஜனங்களை ஒரு முழு ஒப்புவித்தலுக்கு தேவனண்டைக் கொண்டு வருவாராக. எங்களுடையக் கர்த்தராகிய இயேசு

கிறிஸ்துவின் மகத்தான பிதாவானவர் இவர்களுடைய ஆவி, ஆத்துமா சரீரத்தைப் பரிசுத்தப்படுத்தி, இவர்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் பொருத்துவாராக. “ஏனென்றால் ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் சமீபித்திருக்கிறது, அவருடைய மணவாட்டியோ தன்னை ஆயத்தப்படுத்தினாள்.” ஓ, கர்த்தாவே, இது ஆயத்தப்படுத்தும் இரவாயிருப்பதாக, ஏனென்றால் நாங்கள் நாளையத் தினமே ஒருக்கால் அவரை சந்திப்பதாயிருக்கலாம். எனவே

நாங்கள் அவரை சந்திக்கும்படி எந்த நேரத்தில் அழைக்கப்படுவோம் என்பதை நாங்கள் அறியோம். கர்த்தாவே, இதை அருளும்.

245. இப்பொழுது நான் ஜெபித்துக்கொண்டிருக்கையில், நீங்கள் உங்களுடையத் தலைகளை வணங்கியவாறே இருங்கள். உங்களுடையக் கரத்தை உயர்த்தியிருக்கிற நீங்கள் ஒவ்வொருவரும், நீங்கள் அதனோடு ஆழ்ந்த உத்தமத்தோடு இருப்பீர்களேயானால், அப்பொழுது நீங்கள் அதை உண்மையாக பொருளுணர்ந்துக் கூறுங்கள்.

அதாவது நீங்கள் தவறாயிருந்து வருகிறீர்கள் என்பதை ஜனங்கள் அறிந்துகொள்வதனால் நீங்கள் வெட்கமடைகிறதில்லையே! எப்படியாயினும் நீங்கள் அவர்களோடு அங்கே நியாயத்தீர்ப்பிலே நிற்க வேண்டியவர்களாயிருக்கப் போகிறீர்களே. நீங்கள் தவறாயிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள் என்ற திடநம்பிக்கையைத் தேவன் உங்கள் மீது போதுமான அளவு வைத்துள்ளாரே.

